# வெற்றிடங்கள்

**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

IWWRMP

## ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

## நிதி வளம்: உலக வங்கி

ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டமானது (IWWRMP) கமத்தொழில், கால்நடை மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள உலக வங்கியினால் நிதியிடப்பட்ட திட்டமாகும்.

அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் 2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் (MSD) பிரகாரம் ''ஒப்பந்த அடிப்படையில்'' முழு நேர வேலைக்கு பின்வரும் செயற்றிட்ட முகாமைத்துவ பணியாட்தொகுதியின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவி | PS வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தொடர்பாடல் அதிகாரி | D (II) | 1 |
| 2 | பொறியியலாளர் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள் என்பவற்றில் அனுபவம் விரும்பத்தக்கது) | D (II) | 2 |

மேற்கண்ட பதவிகளுக்கான சம்பளங்கள், 25 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான மொத்த திட்டச் செலவைக் கொண்ட திட்டங்களுக்குப் பொருந்தக்கூடிய 02/2026ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் 02ஆம் இணைப்பின் 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்கூறிய 1 மற்றும் 2ஆம் பதவிகளுக்கான அடிப்படைத் தகைமைகள் மற்றும் அனுபவம் (02/2026ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் பிரகாரம்)

1. தொடர்புடைய துறையில் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் அதற்கு இணையான தகுதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகுதி, அதனுடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பிலிருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம் அல்லது அதுபோன்ற ஒரு தொழில்முறைத் தகுதி, மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் வேலை அனுபவம்.

அல்லது

2. தொடர்புடைய துறையில் II/IIIஆம் வகுப்பு பதவி அல்லது அதனையொத்த நிலையில் குறைந்தபட்சம் நான்கு (04) வருட அனுபவம் சகிதம் தொடர்புடைய துறையில் இதனையொத்த நிலையில் அல்லது நாடு முழுவதற்குமான அரசாங்க சேவையில் II/IIIஆம் வகுப்பு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரி.

3. சாரதி (01 வெற்றிடம்)

**சம்பளம்:** 02/2026ஆம் இலக்க MSD சுற்றறிக்கை மற்றும் 10/2025ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம்

**தகைமைகள்:**

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழி உட்பட இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**அனுபவம்:**

கனரக வாகனம் செலுத்தும் உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கனரக வாகன சாரதியாக குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் 64 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
2. 2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் மற்றும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுகள் கொடுப்பனவுகளின் அடிப்படையில் சம்பளம் இருக்கும்.
3. ஆரம்பத்தில் ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்பதுடன் செயற்றிற்ற தேவைப்பாடுகள் மற்றும் திருப்திகரமான செயற்றிறன் பேரில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக் கூடியது.
4. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.
5. உலக வங்கியினால் நிதியிடப்பட்ட அல்லது இலங்கையில் ஏனைய வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் உள்ள அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. விண்ணப்பதாரர்கள் தேவையானபோது மேலதிக நேரம் மற்றும் வார இறுதி நாட்களில் வேலை செய்ய தயாராக இருக்க வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தைக்கான நிரூபிக்கப்பட்ட பதிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அவர்களின் சேவைக்காலம் முழுவதும் மேலதிகாரிகளுடன் தொழில்முறை உறவுகளைப் பேண வேண்டும்.
8. இளம், துடிப்பான மற்றும் உற்சாகமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சுய விபரங்கள் சகிதம் உறவினரல்லாத நடுவர்கள் இருவரின் விபரங்கள் மற்றும் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்முறை சான்றிதழ்களின் பிரதிகள் சகிதமான விண்ணப்பங்களை 2026 ஜூன் 09ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரசாங்க சேவை/ மாகாண அரச சேவை உட்பட உள்ளூராட்சி நிறுவனங்கள்/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிகள் சபைகள் மற்றும் முழுமையான அரசுரிமை நிறுவனங்களில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

மேலும், இதே விண்ணப்பத்தை ao.iwwrmp@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விடயத் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நேர்முகத்தேர்வின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர். ஆதரவு தேடுதல் தகுதியீனமாகக் கருதப்படும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)**
**2ஆம் மாடி, மகாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு - 07.**

**தொலைபேசி: 011 2691163** **இணையதளம்: www.iwwrmp.lk**